Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 177/2024** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **பாண்டீஸ்வரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**09.02.2026**

**முதல் விசாரணை:**

1. நான் இராமானுஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபரான பாண்டி எனது தந்தை ஆவார். கடந்த 01.06.2024 ம் தேதி எனது தந்தை சலூன் கடைக்கு சென்றுவிட்டு திரும்பி இரவு 08.00 மணியை போல் என்தந்தை இராமனுஜபுரம் பேருந்து நிறுத்ததில் இறங்கியபோது எனது தந்தைக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். விபத்து நடந்த விவரத்தை எனது நண்பர் செந்தில்ராஜ் எனக்கு போன் செய்து கூறினார். என்தந்தை சாலையை கடந்தபோது ஒருநபர் இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லாமல் வந்து எனது தந்தை மீது விபத்தை ஏற்படுத்தியதாக செந்தில்ராஜ் கூறினார். எனது தந்தை மீது மோதிய வண்டி Honda Shine என்று கேள்விபட்டேன். அதன் பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை.

2. நான் வருவதற்குள் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்துவிட்டார்கள். நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்ற உடனே ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. நானும், என் தந்தையுடன் ஆம்புலன்சில் சென்று அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் எனது தந்தையை சிகிச்சைக்காக அனுமதித்தேன்.

எனது தந்தைக்கு வலது நெற்றியிலும், வலது முழங்காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு எனது தந்தையின் கால் தொங்கிய நிலையில் இருந்தது. அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் எனது தந்தையை பரிசோதனை செய்துவிட்டு மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்தார்கள். அன்றைய தினம் சனிக்கிழமை என்பதால் நாங்கள் அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையான விமலா மருத்துவமனையில் எனது தந்தையை சிகிச்சைக்காக அனுமதித்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகாரை நான் தான் எழுதிகொடுத்தேன். மேற்படி புகாரை விமலா மருத்துவமனையில் நாங்கள் இருந்தபோது அருப்புக்கோட்டை தாலுகா காவல்நிலையத்தில் இருந்து வந்து பெற்று சென்றார்கள். **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் இராமானுஜபுரத்தில் உள்ள தனியார் சோலார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வேலை நேரம் காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.30 மணி வரை ஆகும். நான் வேலை செய்யும் இடத்திற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் அரை கிமீ இருக்கும், சம்பவம் நடந்தபோது நான் பணியில் இல்லை. விபத்து தொடர்பான தகவலை எனக்கு கூறியதாக சொன்ன செந்தில்ராஜும் என்னுடன் வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவருக்கும் நான் மேற்படி கூறிய வேலை நேரம் தான் என்றால் சரிதான்.

2. விபத்து நடந்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் எங்கள் வீட்டில் பால் வியாபாரம் செய்கிறோம், அதனால் விபத்து நடந்த சமயத்தில் பால் வியாபராத்திற்காக கோபாலபுரத்திற்கு சென்றுவிட்டேன். நான் விபத்து நடந்தபோது கோபாலபுரத்தில் இருந்ததாக கூறும் விவரத்தினை எனது புகார் மற்றும் போலீஸ் விசாரணையின்போது கூறினேனா என்றால் தற்போது சரியாக ஞாபகம் இல்லை. செந்தில் ராஜ் என்பவர் எனக்கு மட்டும் தான் விபத்து தொடர்பாக தகவல் கூறியதாக

எனது புகார் மற்றும் போலீஸ் விசாரணையின்போது கூறியுள்ளேன் என்றால் செந்தில்ராஜ் எனக்கு தகவல் கூறினார், நான் எனது அண்ணனுக்கு தகவல் கூறினேன். ஆனால் மேற்படி விவரத்தை நான் புகாரில் கூறவில்லை. உண்மையில் செந்தில்ராஜ் எனக்கு தகவல் கொடுத்திருந்தால் அதனை புகாரில் காண்பித்திருப்பேன் என்றாலும் அவ்வாறு புகாரில் குறிப்பிடாத காரணத்தினால் மேற்படி செந்தில் ராஜ் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

3. நான் எனது போலீசார் விசாரணையின்போது கொடுத்த வாக்குமூலத்தில் நானும், எனது அண்ணனும் விபத்து நடந்த இடத்திற்கு சென்றதாக கூறியுள்ளேன் என்றாலும், ஆனால் எனது தாயார் கிருஷ்ணம்மாள் அவருடைய போலீஸ் விசாரணையின்போது நான் மற்றும் என் அண்ணனுடன் சேர்ந்து எனது தாயாரும் வந்ததாக கூறியுள்ள காரணத்தினால் நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் நானும், எனது அண்ணனும் உடனே ஆம்புலன்சில் சென்றுவிட்டோம், எனது தாயார் சம்பவ இடத்திற்கு அதன்பின்னர் வந்திருக்கலாம். அதனால் எனக்கு தெரியவில்லை. என்னுடைய அண்ணன் முனியசாமி அவருடைய போலீஸ் விசாரணையின்போது கொடுத்த வாக்குமூலத்தில் செந்தில்ராஜ் எனக்கும் எனது அண்ணனுக்கும் தகவல் கூறியதாக கூறியுள்ளார் என்றாலும் நான் எனது குறுக்கு விசாரணையின்போது நான் தான் எனது அண்ணனுக்கு தகவல் கூறியதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் நாங்கள் இருவருமே சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

4. எதிரி முகப்பு விளக்கு இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து எனது தந்தை மீது மோதியதாக நான் கூறிய விவரத்தினை எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் நான் கூறியவாறு முகப்பு விளக்கு இல்லாமல் எதிரி அவரது வாகனத்தை ஓட்டி வந்திருந்தால் நான் அதனை புகாரில் குறிப்பிட்டு காண்பித்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எனது புகாரில் நான் குறிப்பிடாத காரணத்தினால் நான் கூறியுள்ளவாறு விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ள எதிரியின் முகவரி மற்றும் வாகனத்தின் பதிவு எண் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் போலீசார் என்னிடம்

கூறினார்கள், அதன் அடிப்படையில் தெரியும். எதிரியின் முகவரி மற்றும் அவர் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் மட்டும் தான் போலீசார் கூறினார்கள், மற்ற விவரங்களை நான் தான் புகாரில் எழுதினேன்.

5. விபத்து நடந்த இடத்தில் மின்விளக்குகள் உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் விபத்து நடந்த சமயத்தில் எங்கள் ஊரில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. மேற்கு பக்கம் உள்ள இராமனுஜபுரம் பேருந்து நிறுத்ததில் இருந்து கிழக்கு பக்கம் உள்ள எங்கள் ஊருக்கு செல்வதற்கு மேற்கில் உள்ள பேருந்து நிறுத்ததில் இருந்து சற்று வடக்கு பக்கம் சென்று கிழக்கு பக்கம் உள்ள சாலையை கடக்கும் பகுதியில் தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். எனது தந்தை விபத்து நடந்த சமயத்தில் பொது மக்கள் சாலையை கடப்பதற்காக உள்ள குறிப்பிட்ட இடத்தில் சாலையை கடக்காமல் பேருந்து நிறுத்ததில் இருந்து இறங்கிய உடனே நேராக நடுவில் உள்ள தடுப்பு சுவரை தாண்டி சாலையை கடக்க முயற்சி செய்ததால் தான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த எதிரியின் வாகனமானது என்தந்தை மீது மோதியது என்றாலும் எனது தந்தை முறைப்படி சாலை விதிகளை பின்பற்றி சாலையை கடக்கும் பகுதியை சாலையை கடந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றாலும் சரியல்ல. இரண்டு பகுதிகளுமே இருட்டாக தான் இருந்தது. எதிரி தான் எனது தந்தை மீது மோதிவிட்டார்.

6. சம்பவம் நடக்கும்போது எனது தந்தையின் வயது என்னவென்றால் சுமார் 62 ஆகும். எனது தந்தை வயோதிகத்தின் காரணமாக வடக்கிலிருந்து வந்த வாகனத்தை கவனிக்காமல் சாலையை கடக்க முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் ஊர் முழுவதும் இருட்டாக இருந்தது, அதனால் தான் விபத்து ஏற்பட்டது. எனது தந்தை எந்த இடத்தில் சாலையை கடந்திருந்தாலும் விபத்து ஏற்பட்டிருக்கும்.

**மறுவிசாரணை**

**இல்லை**